[2010 மே 13

இணைப்பு VIII

(1050 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

அறிவிப்புகள், 2010–2011

1. தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்களுக்கு சான்றிதழ் படிப்பு நடத்துதல்:

இந்திய விளையாட்டு குழுமம் ஆறு வார சான்றிதழ் படிப்பு நடத்துவது போல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய விளையாட்டுக் குழுமத்தில் உள்ள வல்லுநர்களைக் கொண்டு விளையாட்டு வசதிகளைக் பயன்படுத்தி உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்களுக்கு ஆறு வார காலச் சான்றிதழ் படிப்பு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 200 உடற்கல்வி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர்கள் பயனடைவார்கள்.

2. அரசுப் பணியாளர்களுக்கு மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்:

தற்பொழுது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பள்ளி மாணவர்கள் / கல்லூரி மாணவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து நடத்தி வருகிறது. மேலும் அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணியின் சார்பில் அரசுப் பணியாளர்கள் பங்கேற்று வருகிறார்கள். இந்த தமிழ்நாட்டு அணிகளை வலுவடையச் செய்யவும், உடற்தகுதி ஏற்படுத்தவும் அரசுப் பணியாளர்களிடையே மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு விளையாட்டுகளில் பல்வேறு

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 13]

வயதினரிடையே நடத்தப்படும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10,000/- வீதம் செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்:

மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அவர்களிடையே பல்வேறு பிரிவினருக்கு நடத்தப்படும். இவ்வகையான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.10,000/- வீதம் செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. சிறிய விளையாட்டு அரங்கங்களில் பயிற்சி அளிக்கும் திட்டம்:

தற்பொழுது மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களில் பல்வேறு விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 15 சிறிய விளையாட்டு அரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார அளவில் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு நிதியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த வசதிகளைப் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் சிறிய விளையாட்டு அரங்கங்களில் உள்ள விளையாட்டு வசதிகளைப் பயன்படுத்தி பயிற்சி முகாமும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படும்.

5. சறுக்கு விளையாட்டு மற்றும் வில்வித்தை விளையாட்டில் பயிற்சி முகாம் நடத்துதல்:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சென்னை, பலநோக்கு உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள விளையாட்டு வசதிகளை பயன்படுத்தி இந்த ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் முதல் முறையாக சறுக்கு விளையாட்டு (Skating) மற்றும் வில்வித்தை (Archery) விளையாட்டில் மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்படும்.

6. கல்லூரி மாணவர்களுக்கும் விளையாட்டுப் பள்ளி / விளையாட்டு விடுதி வசதிகள் அளித்தல்:

தற்பொழுது கல்லூரி மாணவர்களுக்கென 60 விளையாட்டு வீரர்களைக் கொண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் சிறப்பு விளையாட்டு விடுதி இயங்கி வருகிறது. விளையாட்டுப் பள்ளி / விளையாட்டு விடுதிகளிலிருந்து வெளியேறும் சிறந்த விளையாட்டு வீரர்கள் தங்களுடைய விளையாட்டுத் திறமையை மேலும் வளர்த்துக் கொள்ளும் வகையில் கல்லூரி மாணவர்/ மாணவிகளுக்கென விளையாட்டு விடுதி இல்லை. விளையாட்டு விடுதி / விளையாட்டுப் பள்ளிகளில் தங்கி இருந்தபொழுது தேசிய அளவிலான பதக்கங்கள் பெற்றவர்கள் கல்லூரி படிப்பினைத் தொடரும்போது விளையாட்டு விடுதி / விளையாட்டுப் பள்ளிகளில் பயிற்சி பெற விடுதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் 10 சதவீதம் அளவில் 2010-2011 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

7. தரமான சுத்திகரிப்பு நிலையம், கழிவறை மற்றும் உடை மாற்றும் அறையுடன் கூடிய நீச்சல் குளம் (25 x 13 மீ.) அமைத்தல்:

2010-2011 ஆம் நிதியாண்டில் 2 மாவட்டங்களில் தரமான சுத்திகரிப்பு நிலையம், கழிவறை மற்றும் உடை மாற்றும் அறையுடன் கூடிய நீச்சல் குளங்கள் கட்டப்பட உள்ளன. நீச்சல் குளத்திற்கு தேவையான குளம், உபரி நீரை சேகரிக்கும் குளம், சுத்திகரிப்பு நிலையம், குறைந்த அளவிலான நீர் இறைப்பான் மற்றும் கழிவறை ஆகியவற்றிற்கு அரசு ரூ.50.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. கூடுதல் வசதிகளான சுற்றுச் சுவர், நிர்வாகக் கட்டடம், காலரிகள் மற்றும் கூடுதல் நீர் இறைப்பான் போன்றவை மாவட்ட நிர்வாகத்தால் செயல்படுத்தப்படும். குறைந்த வசதிகளுடன் தரம் வாய்ந்த 25 X 13 மீ. நீச்சல் குளம் கட்டுவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சமாகும். 2 மாவட்டங்களில் குறைந்த வசதிகளுடன் நீச்சல் குளங்கள் ரூ.100.00 இலட்சம் செலவினத்தில் அமைக்கப்படும்.

8. 5 தாலுகாக்களில் தலா ரூ.10.00 இலட்சம் மதிப்பிலான விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்:

பெரும்பான்மையான மாவட்ட தலைநகரங்களில் விளையாட்டு வளாகங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட நிலையில்

2010 மே 13]

தாலுகா அளவில் விளையாட்டு அரங்கங்கள் மற்றும் சிறிய விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2010-2011 ஆம் நிதியாண்டில் 400 மீ. ஓடுகளப்பாதை, கால்பந்து மைதானம், கையுந்துபந்து மைதானம், கபாடி மைதானம் மற்றும் சிறிய நிர்வாகக் கட்டடத்துடன் காலரி இல்லாமல் சிறிய விளையாட்டரங்கம் 5 வட்ட தலைநகரங்களில் தலா ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்த செலவினம் ரூ.50.00 இலட்சத்தில் அமைக்கப்படும்.

9. திருநெல்வேலி மாவட்டத்தில் செயற்கை இழை ஓடுகளப் பாதை அமைத்தல்:

தற்போது சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 இடங்களில் செயற்கை இழை ஓடுகளப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களில் உள்ள தடகள வீரர்/ வீராங்கனைகளுக்கு தடகள ஓடுபாதையில் பயிற்சி பெற வாய்ப்பு அளிப்பதற்கு ஏதுவாக, 2009-2010 ஆம் நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 400 மீ. செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்க அனுமதியளித்து ரூ.134.00 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது சர்வதேச தரத்திற்கேற்ப செயற்கை இழை ஓடுகளபாதை அமைக்க ரூ.350.00 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டு 2010-2011 ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.216.00 இலட்சம் செலவினத்தில் இந்தப் பணி நிறைவேற்றப்படும்.

10. ரூ.50.00 இலட்சம் வீதம் இரண்டு இடங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் அமைத்தல்:

விளையாட்டு வீரர்களுக்கு அதிக நேரம் பயிற்சி அளிக்கவும், மழைக் காலங்களில் தடையின்றி பயிற்சி அளிக்கவும் மற்றும் கையுந்துபந்து, கூடைப்பந்து, சிறகுப்பந்து, வாள்சண்டை, டேக்-வோண்டோ ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடத்துவதற்கு பலநோக்கு உள் விளையாட்டரங்கம் அவசியம் தேவைப்படுகிறது. குறைந்தபட்ச வசதிகளுடன் கூடிய ஒரு உள் விளையாட்டரங்கம் கட்டுவதற்கு தேவையான தொகை ரூ.50.00 இலட்சம் என்ற அடிப்படையில் இரண்டு பலநோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள் ரூ.100.00 இலட்சம் செலவினத்தில் அமைக்கப்படும்.

✦✦✦